Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علی رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 49

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

18 ரபிய்யுல் அவ்வல் 1439 ஹிஜ்ரி கமரி　7 ஃபதஹ் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
7 டிசம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஃஊர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஃஊர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**تخرج الصدور الی القبور (தலைவர்கள் கல்லறைகளின் பக்கம் கொண்டு செல்லப்படுவர்) என்ற முன்னறிவிப்பு பற்றி இறைவனிடமிருந்து எனக்கு இவ்வாறு புரிய வைக்கப்பட்டது. அதாவது, பஞ்சாபில் தலைமைப் பீடத்திலுள்ள மவ்லவிகள் இந்த இறையறிவிப்பிற்குப் பிறகு கல்லறைகளின் பக்கம் கொண்டு செல்லப்படுவர்.**

**இதற்கு பிறகு எல்லா மவ்லவிகளுக்கும் பெரும் தலைவராக விளங்கிய மவ்லவி நஸீர் ஹுஸைன் தெஹ்லவி அவர்கள் இவ்வுலகை விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். அவர்தான் முதன் முதலில் எனக்கு எதிராக ஃபத்வா கொடுத்தவர் ஆவார்.**

**பெரியவர் மவ்லவி குலாம் தஸ்தகீர் குஸூரி அவர்கள் எனக்கு எதிராக மக்காவிலிருந்து குஃப்ர் ஃபத்வாக்களை வரவழைத்தார். அவரும்கூட சுயமே தன் தரப்பில் மட்டுமே செய்த முபாஹலாவிற்குப் பிறகு மரணித்து விட்டார்கள்.**

**லூதியானாவைச் சார்ந்த மவ்லவி முஃப்தி முஹம்மது, மவ்லவி அப்துல்லாஹ், மவ்லவி அப்துல் அஸீஸ் ஆகியோர் பலமுறை முபாஹலாவின் வடிவில் لعنت اللہ علی الکاذبین அதாவது, பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று கூறினார். அவர்களும்கூட இந்த இல்ஹாமிற்குப் பிறகு இறந்து விட்டனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**97 -வது அடையாளம்:** இந்த ஒரு முன்னறிவிப்பு அல் ஹகம் மற்றும் அல் பத்ர் பத்திரிகைகளில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. அது تخرج الصدور الی القبور (தலைவர்கள் கல்லறைகளின் பக்கம் கொண்டு செல்லப்படுவர்) என்ற முன்னறிவிப்பாகும். இறைவனிடமிருந்து இதன் பொருள் எனக்கு இவ்வாறு புரிய வைக்கப்பட்டது. அதாவது, தத்தமது இடங்களில் முஃப்தியாக (மார்க்கத் தீர்ப்பு கூறுபவராகக்) கருதப்பட்டு வந்து தமக்கு கீழுள்ள மவ்லவிகளின் ஆசிரியராகவும், தலைவராகவும் இருந்து வந்த பஞ்சாபின் தலைமைப் பீடத்திலிருந்து வந்த மவ்லவிமார்கள் இந்த இல்ஹாமிற்குப் பிறகு கல்லறைகளின் பக்கம் கொண்டு செல்லப்படுவார்கள் என்று கூறப்பட்டது. இந்த இல்ஹாம் வந்த பிறகு இந்த எல்லா மவ்லவிகளுக்கும் பெரும் தலைவராக விளங்கிய மவ்லவி நஸீர் ஹுஸைன் தெஹ்லவி அவர்கள் இந்த உலகை விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். அவர்தான் முதன் முதலில் எனக்கு எதிராக ஃபத்வா கொடுத்துள்ளார். அவர் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் ஆசிரியராக இருந்தவர் ஆவார். அவர்கள் மவ்லவி அபூ சயீது முஹம்மது ஹுஸைன் பட்டாலவி கொடுத்த ஃபத்வாவிற்கு ஏற்ப என்னைப் பற்றி இந்த சொற்களை எழுதியுள்ளார்கள். அதாவது, அப்படிப்பட்ட நபர் வழிதவறியவரும் பிறரை வழிகெடுப்பவரும் இஸ்லாத்தின் வட்டதிலிருந்து வெளியேறிவிட்டவரும் ஆவார். அத்தகைய மக்களை முஸ்லிம்களின் கபர்களில் அடக்கம் செய்யக் கூடாது என்று எழுதியுள்ளார்கள். இந்த மவ்லவி இந்த ஃபத்வாவை வழங்கி முழு பஞ்சாபிலும் நெருப்பை மூட்டி விட்டார். மக்கள் எந்த அளவிற்கு அஞ்சினர் என்றால் நம்மிடம் கை குலுக்குவதிலிருந்து கூட விலகியிருந்து விட்டனர். அதாவது, ஒருவேளை இந்த அளவு தொடர்பு வைப்பதனால்கூட நாம் காஃபிராகி விடுவோம் என்று அவர்கள் அஞ்சினர். பிறகு மவ்லவி குலாம் தஸ்கீர் என்ற பெரியவர் என்னை காஃபிராக்குவதற்காக மக்காவிலிருந்து குஃப்ர் ஃபத்வாக்களை வரவழைத்திருந்தார். அவரும் கூட சுயமே தன் தரப்பிலிருந்து மட்டும் செய்யப்பட்ட முபாஹலாவிற்குப் பிறகு மரணித்து விட்டார். மக்காவில் உள்ளவர்களுக்கு இவரது மரணத்தைப் பற்றிய செய்தி கிடைக்காமல் போனது வருத்தத்திற்குரியதாகும். அதனால் அவர்கள் தங்கள் ஃபத்வாக்களை திரும்பப் பெற்றிருப்பர். பிறகு, லூதியானாவின் முஃப்தியான மவ்லவி முஹம்மது, மவ்லவி அப்துல்லாஹ், மவ்லவி அப்துல் அஸீஸ் ஆகியோர் لعنت اللہ علی الکاذبین அதாவது, பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று கூறி இருந்தனர். அவர்களும் கூட இந்த இல்ஹாம் வந்த பிறகு மரணித்து விட்டனர். பிறகு அமிர்தரஸின் முஃப்தியான மவ்லவி ருசுல் பாபா அவர்களும் இறந்து விட்டார்கள். இவ்வாறு பஞ்சாபிலிருந்த பல மவ்லவிகளும், இந்தியாவிலிருந்த சில மவ்லவிகளும் இந்த இல்ஹாம் வந்த பிறகு இந்த உலகை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். இவ்வாறு மரணித்த இந்த எல்லா நபர்கள் பற்றிய பட்டியலை எழுதுவதாக இருந்தால் அதுவும்கூட ஒரு சிறு நூலாக ஆகி விடும். இந்த அளவு எழுதப்பட்டிருப்பது முன்னறிவிப்பின் உண்மையை வெளிப்படுத்துவதற்கு போதுமானதாகும். இந்த அளவு கூறியிருப்பதில் ஒருவருக்கு மன நிறைவு ஏற்படாமல் இருந்தால் இவ்வாறு மரணித்தவர்களின் ஒரு நீண்ட பட்டியலை நம்மால் தர முடியும்.

**98 -வது அடையாளம்:** ஜமாஅத்தில் கலப்பற்ற தூய உள்ளம் கொண்டவர்களில் முதல் தகுதியில் இருக்கின்ற மதராஸைச் சார்ந்த வியாபாரி சேட் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் காதியானுக்கு வந்திருந்தார்கள். அவர்களது வியாபார விஷயங்களில் சில பிரிவினைகளும் கவலையும் ஏற்பட்டிருந்தது. அவர்கள் துஆவுக்காக வேண்டினார்கள். அப்போது, கீழே நாம் எழுதியுள்ள இந்த இல்ஹாம் வந்தது. அவன் வல்லமையுள்ளவன்; உடைந்து போன பணிகளைச் சரி செய்பவன்; சரியாக இருப்பவற்றை உடைத்து விடுபவன்; எவரும் அவனது இரகசியத்தை அறிய மாட்டார் என்ற இல்ஹாம் வந்தது. இந்த இல்ஹாமிய சொற்றொடரின் பொருள் இதுவாகும். அதாவது, இறைவன் உடைந்து போன பணிகளைச் சரி செய்து விடுவான். கொஞ்ச காலம் கழிந்த பிறகு சரியாக இருப்பவற்றை உடைத்து விடுவான். இந்த இல்ஹாம் காதியானில் சேட் சாஹிப் அவர்களிடம் கூறப்பட்டது. அதற்குப் பிறகு சிறிது நாட்கள்தான் கழிந்திருக்கும். இறைவன்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று அல்லாஹ்வின் அருளால் எல்லா வகையான தியாகங்களையும் செய்வதற்கான சரியான அறிவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கே இருக்கின்றது. இதனை எல்லாரையும் விட அதிகமாக செயல் அளவிலும் அஹ்மதிகளே வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். இன்று உலகம் செல்வத்தையும் பொருளையும் ஒன்று சேர்ப்பதில் ஈடுபட்டு வருகின்றது. அஹ்மதிகளில் மிகப்பெரிய எண்ணிக்கை பணத்தை சம்பாதித்து, செல்வங்களைச் சம்பாதித்து பிறகு எப்போது அவர்களுக்கு பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டப்படுகின்றதோ அப்போது அவற்றை அவர்கள் இறை வழியில் பொருள் தியாகம் செய்வதற்கு கொடுத்து விடுகின்றனர். இவையெல்லாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு தொடர்ந்து வழங்கியுள்ள தர்பிய்யத்தின் விளைவாகும்.

**பொருள் தியாகம் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்திருந்த சில போதனைகளை ஹுஸூர் அவர்கள் எடுதத்துக் கூறினார்கள்.**

அல்லாஹ்வின் வழியில் தனது நேசத்திற்குரிய பொருளை செலவு செய்யும் போது அந்த பொருளை நான் அதிகரிக்கச் செய்வேன் என்று அல்லாஹ் கூறியிருப்பதன் மீது அஹ்மதிகளுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது. அல்லாஹ் அதனை 700 மடங்காக என்னால் பெருக்கித்தர முடியும். அதைவிட அதிகமாகவும் தர முடியும் என்று கூறுகின்றான். எனவே, அஹ்மதிகள் தியாகம் செய்யும் போது அல்லாஹ் அவனது வழியில் தருகின்ற பொருளை அதிகரிக்கும்படி செய்வான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கின்றது. நம்மிடமும் அவன் அவ்வாறு நடந்து கொள்வான் என்று அவர்கள் நம்புகின்றனர்.

உலகின் பல்வேறு நாடுகளில் பழைய அஹ்மதிகளும் புதிய அஹ்மதிகளும் செய்த பொருள் தியாகம் பற்றியும் அதன் விளைவாக அல்லாஹ் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பது பற்றியும் அவர்களின் செல்வங்களில் ஏற்பட்டுள்ள அருள்கள் தொடர்பாகவும் ஈமானுக்கு மிகவும் வலுவூட்டுகின்ற சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அல்லாஹ்வின் அருளால் ஆரம்ப நாட்களிலிருந்து இன்று வரை ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் அல்லாஹ்வின் வாக்குறுதியின் மீது நம்பிக்கை வைத்தவாறு பொருள் தியாகம் செய்து வருகின்றனர். அல்லாஹ் அவர்களோடு எவ்வாறு நடந்து கொள்கின்றான் என்பதையும் அவர்கள் பார்க்கின்றனர். பழைய அஹ்மதிகளும் பார்க்கின்றனர். புதிய அஹ்மதிகளும் பார்க்கின்றனர்.

---

இந்த காலம் இஸ்லாத்தை பரப்புவதை முழுமையடையச் செய்கின்ற காலமாக இருக்கின்றது என்பதை அஹ்மதிகளில் பெரும்பாலார் நன்கு அறிந்திருக்கின்றனர். இதற்காகவே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி இருக்கின்றான். இந்த பணி பல்வேறு மொழிகளில் திருக்குர்ஆனை வெளியிடுவதன் மூலமாகவும், திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்வதன் மூலமாகவும் நடந்து வருகின்றது. பல்வேறு மொழிகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள் வெளியிடப்படுகின்றது. ஏனைய ஜமாஅத் நூல்களும் வெளியிடப்படுகின்றன. பள்ளிவாயில்கள் கட்டப்படுவதன் மூலமாகவும் இந்த பணி நடைபெற்று வருகின்றது. பிரச்சார நிலையங்கள் நிறுவப்படுவதன் மூலமாகவும் இந்த பணிகள் நடைபெற்று வருகின்றது. ஜாமிஆக்கள் நிறுவப்படுவதன் மூலமாகவும் இந்த பணிகள் நடைபெற்று வருகின்றது. ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் இந்தோனேஷியாவில் ஜாமிஆக்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அந்த ஜாமிஆக்களிலிருந்து பட்டம் பெற்று வந்துள்ள முபல்லிக்கள் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த எல்லா விஷயங்களுக்காகவும் பொருள் தியாகம் செய்வது அவசியமானது என்பதை அஹ்மதிகள் அறிந்திருப்பதால் அவர்கள் இறைவழியில் பொருள் தியாகம் செய்து வருகின்றனர். இவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று இறைவனின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் ஈமானின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இந்த அனுதாபத்தின் அடிப்படையில் மருத்துவமனைகளும், பள்ளிக்கூடங்களும் ஜமாஅத்தால் நிறுவப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர ஜமாஅத்தில் பொருள் உதவி செய்வதற்கான அமைப்பும் இயங்கி வருகிறது. இவையெல்லாம் தூய உள்ளம் கொண்ட அஹ்மதிகளின் தியாகங்களின் காரணமாகவே நடைபெற்று வருகிறது.

**தஹ்ரீகே ஜதீதின் 84-வது வருடம் துவங்கி விட்டதற்கான அறிவிப்பை ஹுஸூர் அவர்கள் செய்தார்கள். இதுவரை கிடைத்த அறிக்கைகளுக்கேற்ப கடந்த வருடம் தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பில் 1,25,80,000 பவுண்ட்டுகளை தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு ஜமாஅத்திற்கு கிடைத்திருக்கின்றது.**

தஹ்ரீகே ஜதீது திட்டத்தில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அதிகமான வாய்ப்பு இப்போதும் எஞ்சியிருக்கின்றது. ஜமாஅத் சகோதரர்களும் ஜமாஅத் அமைப்பும் இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துமாறு ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் நாடுகளும் ஜமாஅத்துகளும் செய்துள்ள பொருள் தியாகம் தொடர்பான ஆய்வறிக்கையை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலின் வளாகத்தில் தீப்பற்றியதன் காரணமாக கட்டடத்திற்கு ஏற்பட்ட இழப்பை சரி செய்யும் வகையில் அதை புதிதாக கட்டுவதற்காக யூ.கே ஜமாஅத் சகோதரர்களிடமும் உலகம் முழுவதும் உள்ள வசதியுள்ள ஜமாஅத் சகோதரர்களிடமும் பொருள் தியாகம் செய்யுமாறு ஹுஸூர் அவர்கள் கட்டளையிட்டார்கள். மூன்று வருடங்களுக்காக தாங்கள் விரும்பிய தொகையை அவர்கள் வாக்குறுதியாக கூற வேண்டும். மூன்று வருடங்களில் தங்களது வாக்குறுதியை நிறைவு செய்ய அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். ஆனால் முதல் வருடத்திலேயே குறைந்தபட்சம் தாம் செய்த வாக்குறுதியில் மூன்றில் ஒரு பகுதியை செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

யமனைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஆதில் ஹமூதுனா ஹோதா சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

## சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **3 நவம்பர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **3 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔
لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۚ وَمَا تُنْفِقُوْا مِنْ شَيْءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ

இந்த வசனத்தின் பொருள்: உங்களுக்குப் பிரியமான பொருளை இறைவழியில் செலவு செய்யாதவரை நீங்கள் உண்மையான நன்மையை அடைய முடியாது. நீங்கள் செலவு செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். **(3:93)**

இந்த வசனத்திலுள்ள கருத்தை எப்போதும் அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்கின்ற நம்பிக்கை கொண்டவர்களே நன்கு புரிந்திருக்கின்றனர். இந்த தியாகத்தை எல்லாரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களே வெளிப்பட்டுத்திக் காட்டியிருந்தனர். அவர்களது தங்களது பொருளையும், உயிரையும், நேரத்தையும் மார்க்கத்திற்காக தியாகம் செய்தனர். இம்மக்களே உண்மையில் அல்பிர் அதாவது நன்மை என்பதன் உண்மையான பொருளை புரிந்திருந்தனர். நன்மையின் மிக உயர்ந்த தரத்தை புரிந்து அதை பெற்றுக் கொள்ள அவர்கள் முயற்சி செய்தனர். அந்த தரம் இறையச்சத்தின் உயர்வான தரமாக இருந்தது. நல்லொழுக்கத்தின் உயர்ந்த தரமாக இருந்தது. பொருள் தியாகம் செய்வதன் உயர்ந்த தரமாக இருந்தது. அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுக் கொள்வதற்கான உயர்ந்த தரமாக இருந்தது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. இந்த வசனம் இறங்கிய போது ஹஸ்ரத் அபு தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பைரூஹா என்ற பெயரில் அறியப்படுகின்ற ஒரு தோட்டம் எனக்கு இருக்கின்றது. அது மஸ்ஜிது நபவிக்கு மிகவும் அருகில் இருக்கின்றது. எனது சொத்துக்களில் நான் மிகவும் நேசிப்பது இந்த தோட்டத்தையே ஆகும். இதனை இன்று நான் அல்லாஹ்வின் வழியில் ஸதகாவாக வழங்கு -கின்றேன் என்று கூறினார். (சஹீஹ் புகாரி. கிதாபு த.ஃப்ஸீருல் குர்ஆன். பாபு லன் தனாலுல் பிர்ர ஹதீஸ் எண் 4554)

இதுதான் சஹாபாக்களின் உயர்ந்த தரமாக இருந்தது. இன்று அல்லாஹ்வின் அருளால் எல்லா வகையான தியாகங்களையும் செய்வதற்கான சரியான அறிவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கே இருக்கின்றது. இதனை எல்லாரையும் விட அதிகமாக செயல் அளவிலும் அஹ்மதிகளே வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். இன்று உலகம் செல்வத்தையும் பொருளையும் ஒன்று சேர்ப்பதில் ஈடுபட்டு வருகின்றது. அஹ்மதிகளில் மிகப்பெரிய எண்ணிக்கை பணத்தை சம்பாதித்து, செல்வங்களைச் சம்பாதித்து பிறகு எப்போது அவர்களுக்கு பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டப்படுகின்றதோ அப்போது அவற்றை அவர்கள் இறை வழியில் பொருள் தியாகம் செய்வதற்கு கொடுத்து விடுகின்றனர். இவையெல்லாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு தொடர்ந்து வழங்கியுள்ள தர்பிய்யத்தின் விளைவாகும்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு கோணங்களில் ஹுஸூர் (அலை) அவர்கள் தியாகம் செய்வது பற்றி நமக்கு போதனை செய்துள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் பொருள் தியாகம் செய்வது தொடர்பாக அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்.

உலகில் மனிதன் செல்வத்தை அதிகமான நேசிக்கின்றான். இதன் காரணமாகவே கனவு -களுக்கான விளக்கத்தில் ஒரு நபர் கனவில் தனது கல்லீரலை எடுத்து ஒருவருக்கு வழங்குவதாக பார்த்தால் அதன் கருத்து செல்வத்தை வழங்குவதாகும் என்று எழுதப் -பட்டிருக்கின்றது. இதன் காரணமாகவே உண்மையான இறையச்சத்தையும், ஈமானையும் பெறுவதற்கு لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது, உங்களுக்கு மிகவும் பிரியமான பொருளை செலவு செய்யாத வரையில் நீங்கள் உண்மையான நன்மையை அடைய முடியாது என்று இறைவன் கூறுகின்றான். ஏனென்றால் அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதன் பெரும் பகுதியானது செல்வத்தை செலவு செய்வதன் மூலமாகவே நிறைவேற்றப்படுகின்றது. அடியார் -களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்காக அதிகமாக செல்வம் தேவைப்படுகிறது. தம்மைப் போன்ற மனிதர்களிடமும் படைப்பினங்களுடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்வது ஈமானின் இரண்டாவது பகுதியாக இருக்கின்றது. அது அல்லாமல் ஈமான் முழுமையடைய முடியாது. ஈமான் உள்ளத்தில் உறுதியாக பதியவும் முடியாது.

அதாவது அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துவதும் ஈமானின் ஒரு பகுதியாக இருக்கின்றது. அது அல்லாமல் ஈமான் முழுமை அடைய முடியாது. வலுவடைய முடியாது. உறுதியாக இருக்க முடியாது. மனிதன் தியாகம் செய்யாதவரை மற்றவர்களுக்கு எவ்வாறு பயன்தரத்தக்க வகையில் நடந்து கொள்ள முடியும்? மற்றவர்களுக்கு பயனளிக்கும் வகையில் நடந்து கொள்வதற்கும், அனுதாபத்துடன் நடந்து கொள்வதற்கும் தியாகம் செய்வது அவசியமான ஒன்றாகும்.

இந்த வசனத்தில், لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ என்ற வசனத்தில் இந்த தியாகத்தை பற்றியே போதிக்கப்பட்டிருக்கின்றது. அதைப் பற்றியே வழிகாட்டப்பட்டிருக்கின்றது. எனவே செல்வத்தை இறை வழியில் செலவு செய்வதும் கூட மனிதனின் நற்பாக்கியம் மற்றும் இறையச்சத்தின் தரமாகவும் அளவுகோலாகவும் இருக்கின்றது. அந்த அளவுகோலின் மூலமாகவே அவனது இறையச்சம் பிறித்தறியப்படுகின்றது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கை அல்லாஹ்வுக்காக தம்மை அர்ப்பணிப்பதன் ஓர் அளவுகோலாக இருக்கின்றது. மார்க்கத் தேவைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை அறிவிப்பு செய்த போது அன்னார் தமது வீட்டிலுள்ள எல்லா பொருள் -களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் கொண்டு வந்து விட்டார்கள். (மல்.ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 95-96; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) இதுவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நிலைநாட்டிய தியாகத்தின் உயர்ந்த தரமாகும். அவ்வாறே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் தமது சக்திக்கேற்ப தியாகத்தின் உயர்ந்த தரத்தை நிலைநாட்டினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வீட்டிலுள்ள எல்லா பொருள் -களையும் கொண்டு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வீட்டிலுள்ள பொருள்களில் பாதியை கொண்டு வந்தார்கள். இவ்வாறே மற்ற சஹாபாக்களும் தத்தமது சக்திக்கேற்ப தியாகங்கள் செய்து வந்தனர். (மல்.ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 95; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இந்த உதாரணங்களைக் கூறி இத்தகைய ஆன்மாவையும் இத்தகைய உயர்ந்த தரத்தையும் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் உருவாக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். நான்ஏற்கனவே கூறியது போன்றுபல அஹ்மதிகளும் தியாகங்கள் செய்வதில் உயர்வான தரத்தை பெறுவதற்கு முயற்சி செய்கின்றனர். அவர்கள் திருக்குர்ஆனையும், நபிமொழிகளையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளையும் படிக்கும் போது அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்பவர்களின் பொருளிலும் உயிரிலும் அருள் புரிவதாக அல்லாஹ் வாக்குறுதி அளித்திருக்கும் போது, மனிதன் அல்லாஹ்வின் வழியில் தனது நேசத்திற்குரிய பொருளை செலவு

செய்யும் போது அந்த பொருளை நான் அதிகரிக்கச் செய்வேன் என்று அல்லாஹ் கூறியிருப்பதன் மீது அஹ்மதிகளுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது. அல்லாஹ் அதனை 700 மடங்காக என்னால் பெருக்கித் தர முடியும். அதைவிட அதிகமாகவும் தர முடியும் என்று கூறுகின்றான்.

எனவே, அஹ்மதிகள் தியாகம் செய்யும் போது அல்லாஹ் அவனது வழியில் தருகின்ற பொருளை அதிகரிக்கும்படி செய்வான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கின்றது. நம்மிடமும் அவன் அவ்வாறு நடந்து கொள்வான் என்று அவர்கள் நம்புகின்றனர். அஹ்மதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கட்டளைக்கேற்பவே பொருள் தியாகம் செய்கின்றனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: தனது தூய சம்பாத்தியத்திலிருந்து ஒருவர் ஒரு பேரீத்தம்பழத்தை இறை வழியில் வழங்கும் போது அல்லாஹ் அந்த தூய பொருளை ஏற்றுக் கொள்கின்றான். (இந்த முக்கியமான விஷயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும்).

பிறரை ஏமாற்றி நாம் சம்பாதிக்கும் பொருளை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. அல்லாஹ் தூய்மையான பொருளையே நம்மிடமிருந்து ஏற்றுக் கொள்கின்றான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் தமது தூய சம்பாத்தியத்திலிருந்து ஒரு பேரீத்தம் பழத்தை அல்லாஹ்வின் வழியில் வழங்குவாரோ அதனை அல்லாஹ் தனது வலது கையால் பெற்று ஏற்றுக் கொள்கின்றான். அதை அவன் அதிகரிக்கச் செய்கின்றான். எதுவரை என்றால் அது மலை போன்று ஆகிவிடுகின்றது. உங்களில் ஒருவர் ஒரு கன்றுக் குட்டியை வளர்க்கின்றார். பிறகு அதை ஒரு மிகப்பெரிய விலங்காக ஆக்குகின்றார். அதுபோன்றே இறை வழியில் செலவு செய்வதும் ஆகும். (சஹீஹ் புகாரி கிதாபுஸ் ஸக்காத் பாபு ஸதகக்கத்துன் மின் கஸபின் தய்யிபின்.... ஹதீஸ் 1410)

இக்காலத்தில் இதனை நாம் படிக்கின்ற போது, இந்த விஷயங்களை கேட்கின்ற போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக கூறியிருப்பவற்றை கேட்கும் போது இது ஒன்றும் நமக்கு பழைய கதையல்ல என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். இன்றும் கூட தியாகங்கள் செய்பவர்களுக்கு இப்படிப்பட்ட சொந்த அனுபவங்கள் இருக்கின்றன. இது அவர்களது வசதிகளையும் விரிவானதாக ஆக்கிக் கொண்டே செல்கிறது. மேலும் இதனால் அவர்களது ஈமானும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இது தொடர்பாக ஒரு சில சம்வங்களை நான் எடுத்துக் கூறுவேன்.

கேமரோன் ஆப்ரிக்காவிலுள்ள ஒரு நாடாகும். அங்குள்ள முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அங்குள்ள முஅல்லிம் அபூபக்ர் சாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள். கடந்த வருடம் வேலை இல்லாமல் ஓர் அஹ்மதி இருந்தார். அவருடைய பெயர் அப்துல்லாஹ் ஆகும். அவரது நிலை எந்த அளவு மோசமானதாக இருந்தது என்றால் தமது குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவது கூட அவருக்கு கடினமாக இருந்தது. இந்த நிலைமையில் ஒரு நாள் அவர் ஜுமுஆ தொழுகைக்காக வந்தார். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தஹ்ரீகே ஜதீது செயலர், தஹ்ரீகே ஜதீதில் சந்தா கொடுக்குமாறு அறிவிப்பு செய்தார். அப்போது அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் சட்டைப் பையில் 10,000 பிராங்க் இருந்தது. அவர்கள் அறிவிப்பை கேட்டதும் அந்த முழு தொகையையும் தஹ்ரீகே ஜதீதில் கொடுத்து விட்டார். சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவர் சென்டருக்கு வந்தார். இறைவன் எனது சந்தாவை ஏற்றுக் கொண்டான் என்று கூறினார். ஒரு வாரத்திற்குள் எனக்கு ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை கிடைத்து விட்டது. எனக்கு மாத சம்பளமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதாக அந்த கம்பெனி கூறியுள்ளது. அது நான் வழங்கிய சந்தாவை விட பத்து மடங்கு அதிகமான தொகை எனக்கு மாதந்தோறும் கிடைக்கும். இது அல்லாஹ் என்மீது செய்துள்ளா சிறப்பான அருளாகும். எனவே எனது முதல் மாத சம்பளம் முழுவதையும் சந்தாவிற்காக கொடுத்து விடுவேன் என்று கூறினார்.

இவர்கள் ஏழை மக்களாக இருந்தும் அல்லாஹ் இவர்களை எத்தகைய அனுபவங்களை கடந்து செல்ல வைத்துள்ளான் என்று பாருங்கள். தனது அருள்களையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குகின்றான்.

காங்கோபிராஸிலில் (இதுவும் ஆப்ரிக்காவின் ஒரு நாடாகும்) புதிய அஹ்மதியான தாவூது சாஹிப் அவர்கள் மிகவும் வறுமையில் இருந்து வந்ததன் காரணமாக குறைந்தபட்சம் வாரத்தில் ஒரு முறையாவது அஹ்மதிய்யா பள்ளிவாசலில் வந்து ஜுமுஆ தொழ வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் முறையாக தவறாமல் வர வேண்டும் என்று கூறப்பட்டது. அவர் முறையாக ஜுமுஆ தொழுகைக்கு வர ஆரம்பித்ததும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஒரு நாள் தனிப்பட்ட சந்திப்பின் போது பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் பற்றி அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது. அல்லாஹ் எதனை உங்களுக்கு வழங்கினாலும் அதிலிருந்து கண்டிப்பாக சிலவற்றை இறை வழியில் வழங்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. நீங்கள் எதனை அல்லாஹ்வின் வழியில் வழங்குவீர்களோ அதை அதிகமாக்கி அல்லாஹ் உங்களுக்கு திரும்ப வழங்குவான் என்றும் கூறப்பட்டது.

தூய வழியில் சம்பாதித்த பொருளிலிருந்து இறைவழியில் செலவு செய்யும் போது அல்லாஹ் அதனை அதிகரிக்கச் செய்கின்றான். இது அவனது வாக்குறுதியாகும். மேலும் இறைவழியில் நீங்கள் செலவு செய்தால் அதை நான் திரும்ப உங்களுக்கு தருவேன் என்பதும் அவனது வாக்குதியாகும். இவ்வாறு தியாகம் செய்யும் போது உங்களது வறுமை நீங்கி உங்களது பொருளாதாரத்தில் விரிவான நிலை ஏற்படும் என்றும் கூறப்பட்டது. இவற்றையெல்லாம் கூறி விட்டு அவர் தனது இடத்திற்கு திரும்பி செல்வதற்கான பயண செலவையும் நான் அவருக்கு கொடுத்தேன் என்று முபல்லிக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு வாரம் கழிந்த பிறகு அவர் ஜுமுஆ தொழுகைக்காக மீண்டும் பள்ளிவாசலுக்கு வந்தார். ஜுமுஆ தொழுத பிறகு அவர் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டார். அதற்கான காரணத்தை கேட்ட போது அவர் இவ்வாறு கூறினார். கடந்த ஜுமுஆவில் நீங்கள் சந்தா கொடுக்கும்படி கூறினீர்கள். பள்ளிவாசலிலிருந்து திரும்புவதற்கு முன்னதாக 100 பிராங்கை நான் சந்தாவாக கொடுத்தேன். சந்தா கொடுத்த பிறகு நான் வீட்டிற்கு திரும்பினேன். எனது பக்கத்து வீட்டுக்காரர் எரிக்க பயன்படும் சில விறகுகளை எங்களது வீட்டின் முற்றத்தில் வைத்திருந்தார். அவர் அந்த விறகுகளை திரும்ப எடுத்துச் செல்வதற்காக திடீரென்று எங்கள் வீட்டிற்கு வந்தார். வீட்டிலிருந்தும் திரும்பும் போது 4000 பிராங்க்ஸிஃபாவை அவர் எனது கைகளில் திணித்து விட்டு சென்றார். எனக்கு இதனால் மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனென்றால் நான் சந்தா கொடுத்து விட்டு வீடு வந்து சேர்ந்ததும் இறைவன் எனது சந்தாவை 40 மடங்காக

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29

SUCCESS INDIA
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.

Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q

Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT

Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

அதிகரித்து எனக்கு திரும்ப வழங்கி விட்டான் என்று கூறினார்.

இவ்வாறே தன்ஸானியாவின் அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள். ஒரு புதிதாக பைஅத் செய்த உபைது குறைஷி சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: கடந்த ஐந்து மாதங்களாக எனக்கு நல்ல ஒரு வேலை கிடைக்காமல் இருந்து வந்தது. எனது நிலைமைகள் மிகவும் கடினமானவையாக மாறி விட்டன. மனைவி மக்களும் மிகவும் கஷ்டப்பட்டு வந்தனர். அன்றாட தேவைகள் நிறைவேறுவது கூட மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒரு நாள் முஅல்லிம் சாஹிப் அவர்கள் சந்தா கொடுக்கும்படி என்னிடம் கூறினார்கள். அப்போது எனக்கு இன்னும் அதிகமான கவலை ஏற்பட்டது. ஏனென்றால் அப்போது எவ்வளவு தொகை என்னிடம் இருந்ததோ அது அன்றைய நாளில் எனது குழந்தைகளின் தேவையை நிறைவேற்று–வதற்காக மட்டுமே இருந்தது. முஅல்லிம் சாஹிப் அவர்கள் அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்யும் போது அல்லாஹ் அதில் அருளை இடுகின்றான் என்று கூறியதும் நான் என் கையிலிருந்த அந்த தொகையையும் சந்தாவாக கொடுத்து விட வேண்டும் என்று முடிவு எடுத்தேன். அவ்வாறே செய்தேன். பிறகு இன்று எனது குழந்தைகள் எதை சாப்பிடுவார்கள்? என்ற எண்ணம் எனக்கு வந்தது. இவ்வாறு நான் சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலையில் கொஞ்சம் நேரம் தான் கழிந்திருக்கும். ஓரிடத்தில் கட்டிட வேலை நடந்து கொண்டிருப்பதாக எனக்கு செய்தி கிடைத்தது. மேலும் உடனடியாக நான் அங்கு சென்று அந்த பணியில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் என்னிடம் கூறப்பட்டது. அத்துடன் உடனடியாக கூலியாக முன்தொகையும் வழங்கப்பட்டது. எனக்கு மிகவும் அதிகமாக வியப்பு ஏற்பட்டது. ஏனென்றால் கடந்த ஐந்து மாதங்களாக மிகவும் கஷ்ட நிலையில் எனது வாழ்நாள் கடந்து கொண்டிருந்தது. ஆனால் அல்லாஹ்வின் வழியில் நான் சிறிது வழங்கியதும் அவன் தரப்பிலிருந்து அருள்களின் கதவு திறக்கப்பட்டு விட்டது. அல்லாஹ்வின் வழியில் நான் எனது பொருளை வழங்கிய அந்த நாளிலிருந்து எனது நிலைமைகள் இப்போது மாறி விட்டன. நான் தொடர்ந்து சந்தா செலுத்தி வருவேன் என்று அவர் கூறுகின்றார்.

எனவே புதிதாக பைஅத் செய்தவர்களுக்கும் கூட அல்லாஹ் இத்தகைய அனுபவங்களை கடந்து செல்கின்ற வாய்ப்பை வழங்குகின்றான்.

மாலி ஆப்ரிக்காவிலுள்ள இன்னொரு நாடாகும். அங்குள்ள ஒரு நபருக்கு மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன்னர் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அவர் தனது சாதாரண வருமானத்திலிருந்து 500 பிராங்க்ஸிஃபாவை சந்தாவாக வழங்கினார்கள். அவர் கூறுகின்றார். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்து சந்தா செலுத்துவதற்கு முன்னர் எனது வியாபாரம் சரியாக நடக்கவில்லை. ஆனால் சந்தாவின் அருளால் வழக்கத்திற்கு மாற்றமாக அல்லாஹ் எனது வியாபாரத்தில் அருள் செய்துள்ளான். இப்போது அல்லாஹ்வின் அருளால் அவர் வஸிய்யத்தும் செய்து விட்டார். இப்போது 500 பிராங்க்ஸிஃபாவிற்கு பதிலாக மாதந்தோறும் 35,000 பிராங்க்ஸிஃபாவை அவர் சந்தாவாக வழங்கி வருகிறார். இவரது வியாபாரத்தில் வளம் ஏற்பட்டதன் காரணமாக இவரது அஹ்மதி அல்லாத நண்பர் ஒருவர் ஒருவேளை ஜமாஅத் தான் இவருக்கு உதவி செய்கிறது போலும் என்று கூறி வருகின்றார்.

பிரான்ஸிலிருந்து புதிதாக பைஅத் செய்துள்ள ஹம்ஸா சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: பைஅத் செய்த பிறகு ஜமாஅத்தின் அமைப்பு பற்றி எனக்கு தெரிந்தது. அப்போது எனது பொருளாதார நிலை மிகவும் பலவீனமானதாக இருந்தது. என்னிடம் போதுமான அளவு பணம் இருக்கவில்லை. சில அஹ்மதி நண்பர்கள் என்னிடம் சந்தா கொடுப்பதில் மிகப்பெரும் அருள் இருக்கின்றது. அல்லாஹ் நீங்கள் கொடுக்கும் சந்தாவை பல மடங்கு அதிகரிக்கச் செய்து உங்களுக்கு திரும்ப வழங்கி விடுவான் என்று கூறினர்.

இவர் கூறுகிறார்: அப்போது என்னிடம் 60 யூரோ இருந்தது. அதனை அல்லாஹ்வின் வழியில் சந்தாவாக கொடுத்து விட வேண்டும் என்று நான் விரும்பினேன். பிறகு என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று முடிவெடுத்தேன். பிறகு அந்த தொகையை சந்தாவில் கொடுத்து விட்டேன். அவ்வாறு சந்தா கொடுத்து சில நாட்கள் தான் கழிந்திருக்கும். எனது பேங்க் ஸ்டேட்மன்ட் எனக்கு தரப்பட்டது. அதை நான் பார்த்த போது எனது கணக்கில் 600 யூரோ எங்கிருந்தோ வந்திருப்பது தெரிய வந்தது. அதைப் பற்றி விசாரித்த போது அரசாங்கம் எனக்கு 600 யூரோ தர வேண்டியது இருந்தது. அது முதலில் எனது ரெக்கார்டில் இல்லாமல் இருந்தது. ஆனால் நான் சந்தா கொடுத்த பிறகு அரசாங்க பதிவேட்டில் எனக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகையாக 600 யூரோ குறிப்பிடப்பட்டது. இவ்வாறு நான் கொடுத்த சந்தாவை பல மடங்கு அதிகரிக்கச் செய்து இறைவன் எனக்கு திரும்ப வழங்கியுள்ளான் என்று அவர் கூறுகின்றார். மேலும் இதைப்பற்றி நான் சிந்தித்துக்கூட பார்க்கவில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

தன்ஸானியாவின் அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அஹ்மது சானி சாஹிப் என்றொரு நபர் இருந்தார். அவர் வஸிய்யத்தும் செய்திருந்தார். அவர் தனது வாக்குறுதியாக 50,000 பிராங்க் எழுதியிருந்தார். இதனை அவர் ஆரம்பத்திலேயே கொடுத்தும் முடித்து விட்டார். பிறகு என்னை ஒரு நாள் அவர் கனவில் பார்த்தார். (அதாவது ஹுஸூர் அவர்களை) நான் அவரது வீட்டிற்கு சென்றுள்ளேன். நான் அவரிடம், பூமிக்கு அடியிலிருந்து தங்கத்தை எடுக்கின்ற பணியை நீங்களா செய்கின்றீர்கள்? என்று கேட்கின்றேன். அதற்கு அவர், ஆமாம் ஹுஸூர். நான் தான் செய்கின்றேன். ஆனால் இந்த பணி சரியாக நடக்கவில்லை என்று கூறுகின்றார்.

பிறகு இவர் கூறுகின்றார்: அந்நிலையில் நான் அவரை பார்க்கின்றேன். அப்போது என்னிடமிருந்து தஹ்ரீகே ஜதீதில் நீங்கள் கொடுக்கின்ற சந்தாவை இன்னும் அதிகமாக செலுத்துங்கள் என்று குரல் வந்தது. அஹ்மது சானி சாஹிப் அவர்கள் நாட்டு வைத்திய தொழிலும் புரிந்து வருகின்றார். இதில் திறமை பெற்றவராகவும் இருக்கின்றார்.

அவர் கூறுகின்றார்: இந்த கனவை கண்ட பிறகு வழக்கத்திற்கு மாற்றமாக அல்லாஹ் அவரது கைகளில் அருள்களை இட்டான். கடந்த ஒரு மாத காலமாக மிகத் தொலை தூரப் பகுதிகளிலிருந்து நோயாளிகள் அவரிடம் வருகின்றனர். இவ்வாறு அவரது வருமானத்தில் அசாதாரணமான அதிகரிப்பு ஏற்பட்டது. இந்த கனவை கண்டு ஒரு மாதம் கழிந்திருக்கும் நிலையில் மேலும் 4,27,000 ரூபாயை அவர் தஹ்ரீகே ஜதீது சந்தாவாக வழங்கியுள்ளார். இதன் விளைவாக எல்லாரையும் விட அதிகமாக சந்தா வழங்குபவராக அவர் ஆகிவிட்டார்.

இந்தியாவில் பெங்களூரைச் சார்ந்த தூய உள்ளம் கொண்ட ஓர் இளைஞர் வேலையில்லாமல் இருந்து வந்தார். வேலையில்லாததன் காரணமாக வீடுகட்டுவதற்காக வாங்கிய கடனைக்கூட திரும்ப கொடுக்க முடியாமல் அவர் இருந்து வந்தார். இன்ஸ்பெக்டர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். அவர்களிடம் தஹ்ரீகே ஜதீது


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

சந்தா வாங்குவதற்காக நான் அவர்களது வீட்டிற்கு சென்றேன். ஆனால் தஹ்ரீகே ஜதீது செயலர் அவரது நிலைமையை பற்றி எனக்கு கூறியிருந்ததால் நான் அமைதியாக இருந்தேன். எதுவுமே பேசாமல் இருந்து விட்டேன். ஆனால் அந்த இளைஞர் சுயமே நீங்கள் எதையோ சொல்ல விரும்புகின்றீர்கள் தானே? என்று கேட்டார். அதற்கு இன்ஸ்பெக்டர் சாஹிப், உங்களது நிலைமைகள் பற்றி முழுமையாக எனக்கு எதுவும் தெரியாது. முதலில் நீங்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் உங்களிடமிருந்து ஒரு லட்சம் ரூபாயை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக பெற வேண்டும் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் உங்களது நிலைமைகள் பற்றி எனக்கு தெரிய வந்ததும் எதுவும் கூறாமல் நான் அமைதியாக இருந்து விட்டேன் என்று கூறினார்கள். உங்களது சக்திக்கேற்ப நீங்கள் விரும்புகின்ற வாக்குறுதியை இப்போது எழுதுங்கள் என்றும் இன்ஸ்பெக்டர் சாஹிப் கூறினார்.

அதற்கு அந்த இளைஞர், நீங்கள் ஒரு லட்சம் ரூபாய் வாக்குறுதியாக எழுதிக் கொள்ளுங்கள். நான் அதை செலுத்த முயற்சி செய்வேன். இன்ஷா அல்லாஹ் அதை எப்படியும் செலுத்துவேன் என்று கூறினார்.

பிறகு அல்லாஹ் அவர்கள் மீது அருள் செய்தான். மீண்டும் அவருக்கு ஒரு வேலை கிடைத்தது. மிகவும் சிறந்த ஒரு வேலை கிடைத்தது. அதன் காரணமாக கடந்த வருட மற்றும் இவ்வருடத்திற்கான வாக்குறுதியை அவர் முழுமையாக பூர்த்தி செய்து விட்டார்.

மயூட்டி தீவிலிருந்து அங்குள்ள ஜமாஅத்தின் முபல்லிக் எழுதுகின்றார்கள்: இது மிகவும் வறுமையில் இருந்து வரும் ஒரு நாடாகும். மக்கள் தங்களது வீடுகளிலிருந்து காய்கறிகள் போன்றவற்றை விற்று மிகவும் கஷ்ட நிலைமையில் தமது வாழ்நாளை கழித்து வருகின்றனர். அங்குள்ள ஓர் அஹ்மதி நண்பர் மோட்டார் சைக்கிள் கடை ஒன்றில் வேலை செய்து வருகின்றார். இவர் தான் அங்கு எல்லாரையும் விட அதிகமாக சந்தா கொடுப்பவர் ஆவார்.

அவர் இவ்வாறு கூறுகின்றார். இந்த ஜமாஅத் வியக்கத்தக்க ஜமாஅத் ஆகும். நான் எவ்வளவு சந்தாவாக கொடுக்கின்றேனோ அது மாதத்தின் இறுதியில் இரு மடங்காக எனக்கு திருப்பி கிடைத்து விடுகின்றது.

இவர் கூறுகின்றார்: எனது மனைவி ஒரு நாள் என்னிடம் நீங்கள் இந்த அளவு அதிகமாக ஏன் சந்தா கொடுக்கின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு நான், அல்லாஹ் எனக்கு இந்த சந்தாவை இரு மடங்காக திரும்ப தருகின்றான். எனவே தான் நான் சந்தா கொடுக்கின்றேன் என்று அவளிடம் கூறிறேன்.

பிறகு தனது மனைவியின் கண் முன்னாலேயே அவர் ஒரு தொகையை சந்தாவாக வழங்கினார். பிறகு பாருங்கள். கண்டிப்பாக இந்த தொகையை எனக்கு திரும்ப வழங்கி விடுவான் என்று கூறினார். பிறகு அவர் கூறியது போன்றே நிகழ்ந்தது. மாதத்தின் இறுதியில் அந்த கடையின் எஜமானர் தனக்கு கீழ் வேலை பார்த்து வந்த அனைவருக்கும் போனஸ் வழங்கினார். அப்போது எவ்வளவு தொகை இவருக்கு போனஸாக கிடைத்ததோ அது அவர் சந்தாவாக கொடுத்த தொகையை விட அதிகமாக இருந்தது. இவ்வாறு இவர் நாள்தோறும் பொருள் தியாகம் செய்வதில் முன்னேறி வருகின்றார்.

கனடாவின் அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: லஜ்னா இமாயில்லாஹ்வின் தஹ்ரீகே ஜதீது செயலர் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் இந்த கட்டளைக்கேற்ப அதாவது மாத வருமானத்தில் பாதியையோ அல்லது முழுவதையுமோ தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுக்க வேண்டும் என்பதற்கிணங்க ஒரு சகோதரியிடம் இதைப்பற்றி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அப்போது அந்த பெண்மணி, பகுதி நேர ஊழியராக பணிபுரிந்து வந்தார். எனவே வருமானத்தின் பாதி தொகையை தஹ்ரீகே ஜதீது சந்தாவாக கொடுத்து வந்தார். நான் முழு நேர ஊழியராக ஆகிவிட்டால் மாத வருமானம் முழுவதையுமே சந்தாவாக கொடுப்பேன் என்று அந்த பெண் கூறி வந்தார். பிறகு அவருக்கு முழு நேரமும் பணியாற்றும் வேலை ஒன்று கிடைத்தது. அவருக்கு 5000 டாலர் சம்பளமாக நிர்ணயம் செய்யப்பட்டது. அந்த தொகையை அவர் தஹ்ரீகே ஜதீது சந்தாவாக வழங்கி விட்டார்.

இவ்வாறு இன்னும் பல நல்லுதாரணங்கள் உள்ளன. அல்லாஹ்வின் அருளால் ஆரம்ப நாட்களிலிருந்து இன்று வரை ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் அல்லாஹ்வின் வாக்குறுதியின் மீது நம்பிக்கை வைத்தவாறு பொருள் தியாகம் செய்து வருகின்றனர். அல்லாஹ் அவர்களோடு எவ்வாறு நடந்து கொள்கின்றான் என்பதையும் அவர்கள் பார்க்கின்றனர். பழைய அஹ்மதிகளும் பார்க்கின்றனர். புதிய அஹ்மதிகளும் பார்க்கின்றனர். பல புதிய அஹ்மதிகளின் சம்பவங்களை இப்போது நீங்கள் கேட்டீர்கள். தியாகங்கள் பற்றிய கருத்து அதிலும் பொருள் தியாகம் செய்வதென்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தனிச் சிறப்புகளில் ஒன்றாக இருந்து வருகிறது. இந்த காலம் இஸ்லாத்தை பரப்புவதை முழுமைபடையச் செய்கின்ற காலமாக இருக்கின்றது என்பதை அஹ்மதிகளில் பெரும்பாலார் நன்கு அறிந்திருக்கின்றனர். இதற்காகவே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி இருக்கின்றான்.

இந்த பணி பல்வேறு மொழிகளில் திருக்குர்ஆனை வெளியிடுவதன் மூலமாகவும், திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்வதன் மூலமாகவும் நடந்து வருகின்றது. பல்வேறு மொழிகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள் வெளியிடப்படுகின்றது. ஏனைய ஜமாஅத் நூல்களும் வெளியிடப்படுகின்றன. பள்ளிவாயில்கள் கட்டப்படுவதன் மூலமாகவும் இந்த பணி நடைபெற்று வருகின்றது. பிரச்சார நிலையங்கள் நிறுவப்படுவதன் மூலமாகவும் இந்த பணிகள் நடைபெற்று வருகின்றது. ஜாமிஆக்கள் நிறுவப்படுவதன் மூலமாகவும் இந்த பணிகள் நடைபெற்று வருகின்றது. ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் இந்தோனேஷியாவில் ஜாமிஆக்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அந்த ஜாமிஆக்களிலிருந்து பட்டம் பெற்று வந்துள்ள முபல்லிக்கள் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த எல்லா விஷயங்களுக்காகவும் பொருள் தியாகம் செய்வது அவசியமானது என்பதை அஹ்மதிகள் அறிந்திருப்பதால் அவர்கள் இறைவழியில் பொருள் தியாகம் செய்து வருகின்றனர்.

இவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று இறைவனின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் ஈமானின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இந்த அனுதாபத்தின் அடிப்படையில் மருத்துவமனைகளும், பள்ளிக் கூடங்களும் ஜமாஅத்தால் நிறுவப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர ஜமாஅத்தில் பொருள் உதவி செய்வதற்கான அமைப்பும் இயங்கி வருகிறது. இவையெல்லாம் தூய உள்ளம் கொண்ட அஹ்மதிகளின்


B. Mohamed Adil
93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

தியாகங்களின் காரணமாகவே நடைபெற்று வருகிறது. இந்த தியாகங்களுக்கான நற்கூலியை அல்லாஹ் அவர்களுக்கு இந்த உலகிலும் வழங்குகின்றான். இன்ஷா அல்லாஹ் மறு உலகிலும் அதற்கான நற்கூலியை வழங்குவான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கின்றது. ஏதாவது குறை இருக்கின்றது என்றால் அமைப்பின் தரப்பிலிருந்து மக்களுக்கு இது பற்றி கவனமூட்டாமல் இருந்திருக்கின்றனர் என்று சில நேரங்களில் நமக்கு தெரிய வருகின்றது. மக்களுக்கு இதுபற்றி கவனமூட்டிக் கொண்டே இருந்தால் மக்களுக்கு கவனம் ஏற்பட்டு விடுகின்றது.

ஒரு முறை இவ்வாறு கவனமூட்டுவது தொடர்பாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள் : இந்த நிலையும் கூட இருக்கின்றது. அது சாத்தியமான ஒன்று தான். அதாவது பெரும்பாலான மக்களுக்கு நமது ஜமாஅத்திற்காக சந்தா செலுத்த வேண்டும் என்பதை சொல்லாமல் கூட இருந்திருக்கின்றனர். பல மக்களும் அழுதவாறு பைஅத் செய்து விட்டு செல்கின்றனர். அவர்களுக்கு இதைப் பற்றி கூறியிருந்தால் கண்டிப்பாக அவர்கள் சந்தா கொடுப்பார்கள். அதாவது சந்தா கொடுப்பது அவசியமானதாகும் என்று அவர்களிடம் கூற வேண்டும். ஒவ்வொரு பலவீனமான சகோதரரையும் சந்தாவில் பங்கு பெற வையுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 41; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருக்கு இதுபற்றி எடுத்துக் கூறி இதன் பக்கம் அவரை தூண்ட வேண்டும்.

இன்றும் கூட அவர்கள் கூறிய இந்த விஷயம் முற்றிலும் சரியாக இருக்கின்றது. கவனமூட்டப்படும் போது தான் மக்களுக்கு இதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. எப்போதிருந்து தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீத சந்தாக்களில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கு –வதன் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறி இருந்தேனோ அப்போதிருந்தே எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கவனமூட்டப்படுகின்ற போது அஹ்மதி சிறுவர் –களிடமும் கூட பொருள் தியாகம் செய்வதன் பக்கம் ஒரு உணர்வு ஏற்படுவதை நம்மால் பார்க்க முடிகிறது.

கீனியாவிலுள்ள நிக்கோராவிலிருந்து அங்குள்ள முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: அபூபக்ர் கீபீ சாஹிப் அவர்கள் அங்குள்ள ஜமாஅத்தின் தலைவராக இருந்து வருகின்றார்கள். கீனியா டிஃபன்ஸ் ஃபோர்ஸில் இவர் சார்ஜன்டாகப் பணியாற்றி வருகின்றார். மிகவும் தூய உள்ளம் கொண்ட அஹ்மதியாக இவர் இருக்கின்றார். பள்ளிவாசலிலிருந்து மிக தொலைவிலுள்ள கெண்ட் ஏரியாவில் அவர் வசித்து வந்தாலும் மிகவும் தொலைவிலிருந்து பயணம் செய்து ஜுமுஆ தொழுவதற்காக இவர் பள்ளிவாசலுக்கு வருகின்றார். அத்துடன் ஜுமுஆவுக்கு தமது மூன்று மகள்களையும் தம்முடன் அழைத்து வருகின்றார். தமது வீட்டிலும் குறிப்பாக MTA –விற்கான டிஷ்ஷை இவர் பொருத்தியுள்ளார். தம்முடன் பணியாற்றி வருகின்ற ராணுவ வீரர்களுக்கும் MTA நிகழ்ச்சிகளை இவர் காட்டி வருகின்றார்.

முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்கள்: சில நாட்களுக்கு முன்னர் நான் ஒவ்வொரு குத்பா பேருரையிலும் தஹ்ரீகே ஜதீதிற்காக பொருள் தியாகம் செய்வது தொடர்பாக எடுத்துக் கூறி வந்தேன். கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அபூ பக்கர் சாஹிப் அவர்கள் எனது மகள்களும் குத்பாவை கேட்டு வருகின்றனர். இந்த மாதம் ஒரு விருந்தினர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவர் திரும்பி செல்லும் போது எனது சிறிய மகளான 5 வயது நிரம்பிய சுமைராவின் கையில் 25 சீலிங்கை கொடுத்து விட்டு சென்றார். விருந்தினர் அங்கிருந்து திரும்பி சென்ற பிறகு இந்த சிறுமி தனது தந்தையிடம் வந்தாள்.

இவரது தந்தை கூறுகின்றார். 20 சீலிங்களை அவள் என்னிடம் கொடுத்து இதை என் தரப்பிலிருந்தும் தஹ்ரீகே ஜதீது சந்தாவில் கொடுத்து விடுங்கள். மீதமுள்ள 5 சீலிங்கிற்கு சாப்பிடுவதற்கான சில பொருட்களை நான் வாங்கிக் கொள்வேன் என்று கூறினாள்.

பிறகு லைபேரியாவிலிருந்து முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: தஹ்ரீகே ஜதீது சந்தாவை வசூல் செய்வதற்காக நாங்கள் ஒரு வீட்டிற்கு சென்றிருந்தோம். அந்த வீட்டிலுள்ள நபர்களுக்கு தஹ்ரீகே ஜதீது என்றால் என்ன? என்பதைப் பற்றி எடுத்துக் கூறினோம். இந்த சந்தாவில் எல்லோரும் கலந்து கொள்ளலாம். சிறியவர்களும் கலந்து கொள்ளலாம். பெரியவர்களும் கலந்து கொள்ளலாம். உங்களது சக்திக்கு ஏற்ப நீங்கள் இந்த சந்தாவில் பங்கு பெறலாம் என்று கூறினோம். அந்த வீட்டில் ஒரு சிறுமி இருந்தாள். அவளுக்கு 6 அல்லது 7 வயது தான் இருக்கும். அவளது பெயர் பின்துஸ் சமவீரா ஆகும். அந்த சிறுமி சின்னச்சின்ன பொருள்களை கூடையில் வைத்தவாறு அவற்றை விற்றுக் கொண்டிருந்தாள். நாங்கள் கூறிய விஷயங்களைக் கேட்டு விட்டு குழந்தைகளும் இதில் பங்கு பெற முடியுமா ? என்று கேட்டாள். அதற்கு நாங்கள் ஆம். குழந்தைகளும் இந்த திட்டத்தில் பங்கு பெறுகின்றனர் என்று கூறினோம்.

இதைக் கேட்டு விட்டு அந்த சிறுமி வீட்டிற்குள் ஓடிச் சென்றாள். 20 லைபேரியன் டாலர்களை கொண்டு வந்து என்னிடம் இப்போது இந்த தொகை தான் இருக்கின்றது. என்னையும் இந்த சந்தாவில் பங்கு பெற வையுங்கள் என்று கூறினாள். அந்த சிறுமியின் இந்த அப்பாவித் –தனமான செயலைக் கண்ட அவளது பெற்றோர்களும் கூட சந்தா கொடுத்தனர்.

ஆக, இத்தகைய தியாகத்தின் உதாரணங்கள் அஹ்மதிகளுக்குரிய தனிச்சிறப்பாக இருக்கின்றது. அந்த தியாகங்களை குழந்தைகள் செய்தாலும் சரி; பெரியவர்கள் செய்தாலும் சரி. அல்லது உலகிலுள்ள எந்தவொரு பகுதியில் வாழும் அஹ்மதி செய்தாலும் சரி. அவை அஹ்மதிகளிடம் மட்டுமே காணப்படும் தனிச்சிறப்பாகும். குழந்தைகள் செய்கின்ற தியாகமானது உண்மையிலேயே நல்ல இயல்பின் ஓசையாகும். கியாமத் நாள் வரை அத்தகைய குழந்தைகளும் பெரியவர்களும் ஜமாஅத்தில் பிறந்து கொண்டிருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. அவர்கள் அல்லாஹ் –விற்காக தியாகங்கள் செய்கின்ற உணர்வை உடையவர்களாக இருக்க வேண்டும். தமது வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

பொதுவாக நவம்பர் மாதத்தில் தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பு செய்யப்படுவது ஜமாஅத்தின் வழக்கமாக இருந்து வருகிறது. இன்று நான் தஹ்ரீகே ஜதீதின் 84 –வது வருடத்திற்கான அறிவிப்பை செய்தவாறு கடந்த வருடம் பற்றிய சில புள்ளி விவரங்களை எடுத்துக் கூறுவேன். தஹ்ரீகே ஜதீதின் 83 –வது வருடம் நிறைவு பெற்று விட்டது. நான் ஏற்கனவே கூறியது போன்று நவம்பர் 1 ஆம் தேதியிலிருந்து 84 –வது வருடம் ஆரம்பமாகி விட்டது.

இதுவரை கிடைத்த அறிக்கைகளுக்கேற்ப கடந்த வருடம் தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பில் 1,25,80,000 பவுண்ட்டுகளை தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு ஜமாஅத்திற்கு கிடைத்திருக்கின்றது. இந்த வசூலியானது இதற்கு முந்தைய வருடத்தை விட அல்லாஹ்வின் அருளால் 15,43,000 பவுண்ட்டுகள் அதிகமாகும். ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் பாகிஸ்தானைத் தவிர்த்து முதலிடத்தில் ஜெர்மனி இருக்கின்றது. 100 பள்ளிவாயில்களை கட்டும் திட்டத்திற்காகவும் ஜெர்மனியிலுள்ள ஜமாஅத் சகோதரர்கள் பெரும் தியாகங்களை செய்து வருகின்றனர். குத்தாம், லஜ்னா, அன்ஸார் ஆகிய அனைவருமே தங்களது பொறுப்பில் பெரும் பெரும் தொகையை வசூல் செய்வதில் ஈடுபட்டு

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**0422-2399980, 4351980**
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

**276, N.H. Road, Coimbatore - 641 001.**

வருகின்றனர். ஏறக்குறைய மூன்று மில்லியன் யூரோவை அதற்காக அவர்கள் ஒன்று திரட்டியுள்ளனர். இந்த அளவு பெரும் செல்வந்தர்கள் அங்கு இல்லை தான். என்றாலும் அவர்களிடம் இந்த தியாக உணர்வு அதிகமாக இருக்கின்றது. அல்லாஹ் அவர்களது பொருளிலும் விரிவான நிலையை ஏற்படுத்துவானாக. அவர்களின் இந்த தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக.

இங்கிலாந்து இரண்டாவது இடத்தில் உள்ளது. மூன்றாவது இடத்தில் அமெரிக்கா உள்ளது. நான்காவது இடத்தில் கனடாவும், ஐந்தாவது இடத்தில் இந்தியாவும், ஆறாவது இடத்தில் ஆஸ்திரேலியாவும், ஏழாவது இடத்தில் இந்தோநேஷியாவும், எட்டாவது மற்றும் ஒன்பதாவது இடத்தில் மத்திய கிழக்கிலுள்ள இரண்டு நாடுகளும், பத்தாவது இடத்தில் கானாவும் உள்ளது.

தனி நபர் விகிதாச்சார அடிப்படையில் சந்தா செலுத்துவதில் இரண்டாவது இடத்தில் மத்திய கிழக்கிலுள்ள ஒரு ஜமாஅத் இருக்கிறது. அதற்கு அடுத்த இடத்தில் சிவிர்சர்லாந்து, அதற்கு அடுத்த இடத்தில் U.K. –வும் உள்ளது. ஆனால் U.K. –வில் இந்த சந்தாவில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதன் ஆண்டு மாநாட்டில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையோடு பார்க்கும் போது அது மிகவும் குறைவாக இருக்கின்றது. ஆண்டு மாநாட்டின் போது கூட U.K. ஜமாஅத்தைச் சார்ந்த அனைவரும் அதில் பங்கு பெறுவதில்லை. இதன் பொருள் என்னவென்றால், முழுமையான முறையில் இவ்விஷயத்தில் கவனமூட்டப் –படவில்லை என்பது தெரிய வருகிறது. ஐந்தாவது இடத்தில் அமெரிக்காவும், ஆறாவது இடத்தில் ஆஸ்திரேலியாவும், ஏழாவது இடத்தில் ஜெர்மனியும் உள்ளன.

ஜெர்மனியில் இந்த சந்தாவில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை அதன் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஏறக்குறைய சமமாக இருப்பது தெரிகிறது. அதன் பொருள் என்னவென்றால் அங்குள்ள தஹ்ரீகே ஜதீது செயலர் நன்றாக முயற்சி செய்துள்ளார். மேலும் அந்த சந்தாவுடன் தொடர்புடைய மற்ற செயலர்களும் இவ்வாறே நன்றாக முயற்சி செய்திருக்கின்றனர்.

எட்டாவது இடத்தில் சுவீடன் உள்ளது. ஒன்பதாவது இடத்தில் நார்வேயும், பத்தாவது இடத்தில் கனடாவும் உள்ளது.

ஆப்ரிக்க ஜமாஅத்துகளில் ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில் முன்னனியில் உள்ள ஜமாஅத்துகள் இதுவாகும். கானா, நைஜீரியா, மாலி, கேமரோன், லைபீரியா மற்றும் பெனின் உள்ளன.

இந்த சந்தாவில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று சில வருடங்களாக நான் அறிவுறுத்தி கூறி வருகின்றேன். தொகை எப்படியும் ஒன்று சேர்ந்து விடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் சந்தாவை கேட்டு வாங்க வேண்டும். அவர் ஒரு பைசாவை சந்தாவாக கொடுத்தாலும் சரியே என்று கூறியுள்ளார்கள். பல துளிகள் சேர்ந்து வெள்ளமாகுவது போன்று பல ஒரு பைசாக்கள் ஒன்று சேர்ந்து பெரிய தொகையாகி விடும். (மல்ஃபூஸாத் தொகுதி 62 பக்கம் 40; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) எனவே தான் இந்த சந்தாவில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று நான் கூறினேன். அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் இந்த எண்ணிக்கை 16 இலட்சத்தை விட அதிகமாகும். இந்த வருடம் புதிதாக இரண்டு லட்சம் பேர் இந்த சந்தாவில் பங்கு பெற்றுள்ளனர்.

ஆப்ரிக்க நாடுகளில் புதிதாக இணைபவர் –களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் நைஜீரியா முதலிடத்தில் உள்ளது. அங்கு 57,000 பேர் இந்த சந்தாவில் புதிதாக பங்கு பெற்றுள்ளனர். அதற்கு அடுத்த இடத்தில் கேமரோன் உள்ளது. அங்கு 23,000 பேர் இந்த சந்தா அமைப்பில் இணைந்துள்ளனர். அதற்கு அடுத்த இடத்தில் பெனினும், அதற்குப் பிறகு ஐவெரிகோஸ்டும், அதற்கு அடுத்த இடத்தில் கினிகனாகிரியும், அதற்கு அடுத்து முறையே மாலி, கினி பஸாவ், செனிகால் மற்றும் போர்கினோ ஃபாஸோ ஆகிய நாடுகள் உள்ளன.

ஆப்ரிக்காவைத் தவிர வெளியிலுள்ள நாடுகளில் இந்தோனேஷியா முதல் இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் ஜெர்மனியும், பிறகு இந்தியாவும், அமெரிக்காவும், கனடாவும் வருகின்றன. அதாவது இந்த நாடுகளில் இந்த சந்தாவில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எந்நிலையிலும் இந்த சந்தாவில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகமாக்குவதற்கு போதுமான அளவில் வாய்ப்பு இருக்கின்றது. ஜமாஅத்துகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

பாகிஸ்தானில் அங்குள்ள அமாரத்துகளின் அமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே முதல் மூன்று இடத்திலுள்ள மாவட்டங்களை குறிப்பிடுவதற்கு பகரமாக ஜமாஅத்துகளின் தரவரிசை தரப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் தியாகத்தில் ரப்வா முதல் இடத்திலும், அதற்கு அடுத்த இடத்தில் இஸ்லாமாபாத்தும், அதற்கு அடுத்த இடத்தில் லாஹூர் டவுண்ஷிப்பும், பிறகு கராச்சியிலுள்ள அஸீஸாபாத்தும், பிறகு லாஹூரிலுள்ள டெய்லிகேட்டும், பிறகு ராவல்பிண்டி நகரமும், அடுத்து முறையே பெஷாவர், கொய்ட்டா மற்றும் குஜ்ரான்வாலா வருகின்றது.

மாவட்ட அளவில் பாகிஸ்தானில் அதிகமாக தியாகம் செய்துள்ள மாவட்டங்கள் இதுவாகும். 1) சர்கோதா 2) பைஸலாபாத் 3) உமர்கோட் 4) குஜராத் 5) நாரோவால் 6) ஹைதராபாத் 7) மீர்பூர்ஹாஸ் 8) பாகல்பூர், உக்காடா ஆகிய மாவட்டங்கள் முன்னனியில் உள்ளன. டோபா டேக்சிங் ஒன்பதாவது இடத்திலும், கோட்லி ஆஸாத் காஷ்மீர் பத்தாவது இடத்திலும் உள்ளன.

ஜெர்மனியில் முன்னனியிலுள்ள முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: 1) நோயஸ் 2) ரோட்ரெக் மார்க் 3) வொயின் கார்ட்டன் 4) நிடா 5) பியுடென்பெர்க் 6) மெஹ்தி ஆபாத் 7) ஹெடல் பெர்க் 8) லிம்பர்க் 9) கீல் 10) ஃப்ளோரிஸ்ஹைம்.

ஜெர்மனியில் முன்னனியிலுள்ள முதல் பத்து அமாரத்துகள் இவையாகும்: 1) ஹெம்பர்க் 2) ஃப்ராங்பர்ட் 3) மோர்ஃபெல்டன் 4) கிரோஸ் கெரோவ் 5) வீஃபாடென் 6) ட்ரெஸ்டென் 7) மான்ஹைம் 8) ரியிட்ஸ்டட் 9) ட்ராம்ஸ்டட் 10) ஓஃபன் பார்க்.

வசூலின் அடிப்படையில் இங்கிலாந்தில் முன்னனியிலுள்ள முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: 1) மஸ்ஜிது ஃபஸல் 2) வெர்ஸ்ட்டன் பார்க் 3) பெர்ம்ஹிங்கம் சவுத் 4) பிரட் ஃபோர்ட் சவுத் 5) நார்த்பட்னி 6) கிலாஸ்கோ 7) இஸ்லாமாபாத் 8) நியூ மார்டன் 9) ஜில்லிங்கம் 10) ஸ்கான்தார்பி.

தனி நபர் விகிதாச்சார அடிப்படையில் சந்தா செலுத்துவதில் முன்னனியிலுள்ள மண்டலங்கள் இவையாகும்: 1) சவுத் ரீஜியன் 2) நார்த் ஈஸ்ட் 3) இஸ்லாமாபாத் 4) மிட்லேண்ட் 5) ஸ்காட்லேண்ட்.

அமெரிக்காவில் முன்னனியிலுள்ள முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: 1) சிலிகான் வேலி 2) ஸ்குவஸ்வாஸ் 3) சியாட்டல் 4) டெட்ராய்டு 5) யார்க் 6) லாஸ் ஏஞ்சல் 7) சில்வர் ஸ்பிரிங் 8) சென்ட்ரல் ஜெர்ஸி 9) சிகாகோ 10) அட்லாண்டா இன்லேண்ட்.

வசூலின் அடிப்படையில் கனடாவில் முன்னனியிலுள்ள உள்ளூர் அமாரத்துகள் இவையாகும்: 1) வான் 2) பீஸ் வில்லேஜ் 3) பிரம்டன் 4) வேன்கூவர் 5) மிஸ்ஸாகா.

இந்தியாவில் முன்னனியிலுள்ள முதல் பத்து மாநிலங்கள் இவையாகும்: 1) கேரளா 2) கர்நாடகா 3) ஜம்மு காஷ்மீர் 4) தெலுங்கானா 5) தமிழ்நாடு 6) ஒடிசா 7) பஞ்சாப் 8) பெங்கால் 9) டெல்லி 10) மஹாராஷ்டிரா.

இந்தியாவில் முன்னனியிலுள்ள முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: 1) கோழிக்கோடு 2) பத்தபிரியம் 3) காதியான் 4) ஹைதராபாத் 5) கொல்கத்தா 6) பெங்களூர் 7) கண்ணூர் டவுண் 8) பயங்காடி 9) மாத்தோட்டம் 10) கருலாயி.

ஆஸ்திரேலியாவில் முன்னனியிலுள்ள முதல் பத்து ஜமாஅத்துகள் இவையாகும்: 1) டாஸில்ஹில் 2) மெல்பர்ன் 3) பெர்விக் 4) ஏஸிடி கான்பெரா 5)மார்ஸ்டென் 6)பிரிஸ்பென் 7)லோகன் 8) அடிலெய்டு சவுத் 9) பென்ரித் 10) மல்வெர்ன் ஈஸ்ட்.

அல்லாஹ் இவர்களது அனைவரது பொருளிலும் உயிரிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக.

இதற்குப் பிறகு சுருக்கமாக நான் இன்னொரு திட்டத்தையும் உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன். அது யூ.கே விற்கு பொதுவான ஒரு திட்டமாகும். அதைத்தவிர உலகிலுள்ள வசதிபடைத்த செல்வந்தர்களும் இத்திட்டத்தில் பங்கு பெற வேண்டும்.

பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் தீப்பிடித்த சம்பவம் நிகழ்ந்து ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. அப்போது எரிந்து போன அப்பகுதிகளை மீண்டும் சீரமைப்பதற்காக இந்த திட்டம் அறிவிக்கப்படுகின்றது. 1984 ஆம் ஆண்டிலிருந்து கிலாஃபத் இங்கு இருந்து வருவதால் உலகிலுள்ள ஏராளமான நபர்கள் இங்கு வருகின்றனர். அவர்களுக்கு தங்குவதற்கான வசதியை செய்ய வேண்டியதுள்ளது. இதைத்தவிர பல நிகழ்ச்சிகளும் இங்கு நடக்கின்றது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிளை அமைப்புகள் மற்றும் ஜமாஅத்துகளின் பெரும் பெரும் குழுக்கள் ஒவ்வொரு ஆண்டும் இங்கு வருகின்றன. அவர்களை தங்க வைப்பதற்கான பிரச்சனையும் இருந்து வருகிறது. பள்ளிவாசலை ஒட்டி ஒரு ஹாலும் ஒரு அறையும் இதற்கு முன் இருந்து வந்தது. அவை எரிந்து போன பிறகு இப்போது அங்கு நெருக்கடி நிலவுகிறது. அவற்றை மீண்டும் கட்டுவது தொடர்பான திட்டங்கள் வகுக்கப் –பட்டிருக்கின்றன. அது மிகப்பெரிய திட்டமாகும். இடம் ஓரளவே பெரிதாக இருக்கின்றது. ஆனால் திட்டம் மிகப்பெரிய திட்டமாகும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இந்த பள்ளிவாயிலை கட்டுவது தொடர்பான அறிவிப்பை செய்த போது ஆரம்பத்தில் இதற்காக ஐந்து மில்லியன் தொகையை இந்த திட்டத்திற்காக வழங்கும்படி கூறியிருந்தார்கள். ஆனால் அதைவிட செலவு அதிகமாகி விட்டதால் இப்போது மீண்டும் 5000 மில்லியன் தொகையை வழங்க வேண்டுமென்ற அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்குப் பிறகும் பல்வேறு பணிகள் மெதுமெதுவாக நடந்து கொண்டிருந்தன. அதனை ஜமாஅத் தமது பட்ஜெட்டிலிருந்து செலவு செய்து வந்தது. போதுமான அளவில் பணி நிறைவை அடைந்தது. பிறகு இந்த விபத்து நடந்ததும் கூட இறை நியதியே ஆகும். ஏனென்றால் ஒரு பெரும் பகுதி எரிந்து விட்டது. இப்போது உருவாக்கப்பட்டுள்ள புதிய திட்டத்திற்கும் 11 மில்லியன் தொகை வரை தேவைப்படுகிறது. இதில் பாதி தொகை இப்போது நமது கையில் இருக்கின்றது. இந்த தொகை இன்சூரன்ஸ் மூலமாகவும், ஏனைய ஜமாஅத் சகோதரர்கள் வழங்கிய சந்தாவின் மூலமாகவும் நமக்கு கிடைத்திருக்கின்றது.

எனவே மீதமுள்ள பாதி தொகையின் தேவை தான் இப்போது இருந்து வருகிறது. இதற்காக எந்நிலையிலும் ஜமாஅத் சகோதரர்கள் தான் தியாகம் செய்ய வேண்டியதுள்ளது. பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயில் அதன் கட்டுமான பணியின் அடிப்படையில் பார்க்கும் போது மற்றும் அதன் அழகின் அடிப்படையில் பார்க்கும் போது பெரும் கட்டிடமாக இருக்கும் அடிப்படையில் பார்க்கும் போது ஐரோப்பாவிலுள்ள 50 முக்கிய கட்டிடங்களில் ஒன்றாக பட்டியலில் இடம் பெற்றுள்ளது. அந்த சமயத்தில் பள்ளிவாயிலின் முழு பகுதியும் நிறைபெற்று இருந்தது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இந்த திட்டத்தை நம்முன் வைத்த போது இது ஐரோப்பாவின் மிகப்பெரிய பள்ளிவாயிலாக இருக்கும் என்று நான் நம்புகிறேன் என்று தமது கருத்தை கூறியிருந்தார்கள். அதாவது இதை விட வேறு எந்தவொரு பள்ளிவாயிலும் பெரியதாக இருக்காது என்று கூறியிருந்தார்கள். அப்போது ஹுஸூர் அவர்கள் 7000 அல்லது 8000 பேர் நிற்பதற்கு இடம் இருக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். பிறகு நமது தேவைகள் நிறைவேறும் என்றும் அப்போது அவர்கள் கூறியிருந்தார்கள். ஆனால் ஹாலையும் சேர்த்து பார்க்கும் போது பள்ளிவாயிலில் 10,000 பேர் தொழுவதற்கான வசதி இருந்தது. (அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 7-13 ஏப்ரல் 1985 பக்கம் 5-6. மார்ச் 23-29, 2001 பக்கம் 6) அந்த வசதியும் கூட இரண்டு மூன்று வருடங்கள் வரையே நீடித்தது. பிறகு மற்ற ஜமாஅத்துகளை சார்ந்த சகோதரர்கள் பெருநாள் தொழுகையை தொழுவதற்காக இந்த பள்ளிவாயிலுக்கு வர வேண்டாம் என்று அறிவிக்க வேண்டிதாயிற்று. தத்தமது பகுதிகளில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றும்படி கூறப்பட்டது.

சகோதரர்களுக்கு தெரியும். பார்க்கில் தனியாக இதற்காக கூடாரமும் அமைக்க வேண்டியதும் வந்தது. அவ்வாறு பெருநாள் தொழுகைக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. எந்நிலையிலும் தேவை இருக்கத்தான் செய்கின்றது. எந்த அளவு நாம் இந்த பணியை சிறந்த முறையிலும் பெரிய அளவிலும் செய்ய முடியுமோ அந்த அளவு சிறப்பாகவும் பெரிதாகவும் இதை செய்து முடிப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். எவர்களுக்கு இத்திட்டத்தில் முதலில் பங்கு பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் இருந்ததோ அவர்கள் கண்டிப்பாக முயற்சி செய்தவாறு இத்திட்டத்தில் பங்கு பெற வேண்டும். இது U.K ஜமாஅத்தின் திட்டமாக இருப்பதால் பொதுவாக நான் ஏற்கனவே கூறியது போன்று இது U.K ஜமாஅத்திலுள்ள அஹ்மதிகளின் பணியாகவே இருக்கின்றது. அவர்கள் இப்பணியில் பங்கு பெற வேண்டும். வெளி உலகத்திலுள்ள வசதி படைத்த ஜமாஅத் சகோதரர்கள் இதில் பங்கு பெற வேண்டும். கிளை அமைப்புகளும் இதில் பங்கு பெற வேண்டும். பெரும் பெரும் ஜமாஅத்துகளும் ஒட்டு மொத்த ஜமாஅத் என்ற அளவில் இதில் பங்கு பெற வேண்டும். ஏனென்றால் முழு வருடமும் இங்கு வெளியிலிருந்து விருந்தினர்கள் இங்கு வந்து கொண்டே இருக்கின்றனர். யூ.கே ஜமாஅத் எல்லா நேரமும் இவர்களுக்கு விருந்தோம்பல் செய்து வருகின்றது. இந்த எண்ணிக்கை இப்போது ஆயிரங்களை எட்டி விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள் : மன்னர் ஔரங்கசீப் அவர்களின் காலத்தில் அரசு பள்ளிவாசலில் தீப்பற்றி எரிந்தது. அப்போது மக்கள் அரசரிடம் ஓடிச் சென்றனர். பள்ளிவாயில் தீப்பற்றி எரிகிறது என்று அரசரிடம் கூறினர். இந்த செய்தியை கேட்டதும் அரசர் உடனடியாக சஜ்தாவில் விழுந்து விட்டார். இறைவனுக்கு நன்றி தெரிவித்தார். ஆட்சேபணை செய்பவர்கள் வியப்புடன், அரசரே! நன்றி தெரிவிப்பதற்கு இது என்ன சந்தர்ப்பம்? என்று கேட்டனர். இறை இல்லம் தீப்பற்றி எரிகின்றது. முஸ்லிம்களின் உள்ளத்தில் கடுமையான துக்கம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் நீங்கள் ஏன் இவ்வாறு நடந்து கொண்டீர்கள்? என்று கேட்டனர்.

அதற்கு அரசர், நான் நீண்ட காலமாக இவ்வாறு எண்ணிக் கொண்டிருந்தேன். இதற்காக நான் நூற்றுக்கணக்கான பெரு மூச்சுக்களை விட்டிருக்கின்றேன். அதாவது இவ்வளவு பெரிய மகத்தான பள்ளிவாசல் கட்டப்பட்டிருக்கின்றது. இந்த கட்டிடம் ஆயிரக்கணக்கான படைப்பினங்களுக்கு பயன் தரக்கூடியதாக இருக்கின்றது. அந்தோ! இந்த நன்மையான பணியில் எனது பங்கும் இருக்கும் வகையில் ஏதாவதொரு ஆலோசனை என்னிடம் கூறப்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நான் எண்ணினேன். ஆனால் நாலாப்புறமும் நான் இந்த பள்ளிவாசலை முழுமையான முறையில் நிறைவாகவும், எவ்வித குறையும் இல்லாமலும் இருப்பதை பார்த்தேன். எனவே என்னால் எந்தவொரு பணியையும் செய்வது தொடர்பாக சிந்திக்கவே முடியவில்லை. இப்போது இறைவன் நான் அவனிடமிருந்து நற்கூலி பெறுவதற்கான ஒரு வழியை எனக்கு ஏற்படுத்தி தந்துள்ளான். அல்லாஹ் நன்கு கேட்பவனாகவும் நன்கு அறிபவனாகவும் இருக்கின்றான் என்று அரசர் கூறினார். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 387; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று எவர்களுக்கு முதலில் இந்த தியாகத்தில் பங்கு பெற முடியவில்லையோ அவர்கள் கண்டிப்பாக இதற்காக பொருள் தியாகம் செய்வதில் பங்கு பெற வேண்டும். மூன்று வருடங்களுக்காக தாங்கள் விரும்பிய தொகையை அவர்கள் வாக்குறுதியாக கூற வேண்டும். மூன்று வருடங்களில் தங்களது வாக்குறுதியை நிறைவு செய்ய அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். ஆனால் முதல் வருடத்திலேயே குறைந்த பட்சம் தாம் செய்த வாக்குறுதியில் மூன்றில் ஒரு பகுதியை செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இந்த திட்டம் தொடர்பான விவரங்களை கூறுகின்றேன். முதலில் இந்த கவர்ட் ஏரியா 4700 சதுர அடிகளை கொண்டதாக இருந்தது. இப்போது புதிய திட்டத்தின் அடிப்படையில் இது 5800 சதுர அடிகளை கொண்டதாக இருக்கும்.

நாஸிர் ஹாலின் மேற்கூரையும் சற்று உயர்த்தப் –பட்டிருக்கின்றது. அதைத்தவிர முதல் தளத்தில் நூர் ஹால் இருக்கும். அதன் மேற்கூரையும் சற்று உயர்த்தப்பட்டிருக்கின்றது. இரண்டாவது மேல் தளத்தில் அலுவலகங்கள் இருக்கும். மூன்றாவது மற்றும் நான்காவது மேல் தளத்தில் அலுவலகங்கள், கண்காட்சி அரங்கு மற்றும் விருந்தினர்கள் தங்குவதற்கான இடமும் அதாவது கெஸ்ட் ரூம் அமைக்கப்படும்.

பிறகு இங்குள்ள கேட்ஸ் சற்று விலக்கி வைத்து கட்டப்பட்டுள்ளது. அதன் மூலம் வாகனங்களை நிறுத்துவதற்கான இடம் கிடைத்து விடும். வாகனங்கள் வந்து போவதற்கு அது எளிதாக இருக்கும். நடந்து வருபவர்களுக்கும் அது எளிதாக இருக்கும். ஆண்கள் மற்றும் பெண்களுக்கான வழிப்பாதை தனித்தனியாக அமைக்கப்படும். அல்லாஹ் அருள் செய்வானாக. U.K ஜமாஅத்திற்கு இந்த திட்டத்தை முழுமைப் –படுத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இது யமனைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஆதில் ஹமீது ஹமூதுனா ஹோதா சாஹிப் அவர்கள் உடைய ஜனாஸாவாகும். 14 அக்டோபரில் தனது 40 வயதில் மாரடைப்பின் காரணமாக இவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவரது மகனான தாரிக் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: பைஅத் செய்வதற்கு முன்னதாக எனது தந்தையார் தொழுகைகளை முறையாக நிறைவேற்றுபவராக இருக்கவில்லை. பைஅத் செய்த பிறகு அவர்கள் தொழுகைகளை முறையாக நிறைவேற்றியது மட்டுமல்லாமல் எங்களுக்கு மார்க்கத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் ஜமாஅத்துடன் வலுவான தொடர்வை நிலைநாட்டுவது பற்றியும் போதனை செய்து கொண்டே இருந்தார்கள். எங்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு வீட்டில் தொழுகைகளை ஜமாஅத்தாக தொழுது வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை படித்துக் காட்டி எங்களை கேட்கும்படி செய்தார்கள். MTA –வின் Frequency குறிப்பிடப்பட்டிருக்கின்ற கார்டுகளை எப்போதும் தம்மிடம் அவர்கள் வைத்திருந்தார்கள். எங்கு சென்றாலும் இந்த காட்டுகளை விநியோகம் செய்வார்கள். பிறகு தப்லீக் செய்வார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களது வாழ்க்கை முற்றிலுமாக மாறி விட்டது. எப்போதும் அவர்களிடம் நற்பாக்கியம் மற்றும் மகிழ்ச்சிக்கான அடையாளங்கள் தென்பட்டன.

ஓர் அஹ்மதி சகோதரரான அலி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: பைஅத்திற்கு முன்னதாக அவர்கள் என்னையும் எனது சில நண்பர்களையும் தமது வீட்டிற்கு அழைத்து அஹ்மதிய்யத் தொடர்பாக கேட்டு வந்தார்கள். நாங்கள் அவருக்கு கருத்து வேறுபாடுள்ள பல்வேறு விஷயங்களை விளக்கிக் கூறினோம். உதாரணமாக, தஜ்ஜால் தோன்றுவது, ஈஸா (அலை) அவர்களின் மரணம், இமாம் மஹ்தியின் தோற்றம் ஆகிய விஷயங்களைப் பற்றி அவர்களுக்கு புரிய வைத்தோம். மர்ஹூம் அவர்களுக்கு நாங்கள் கூறிய விஷயங்களும் நமது கொள்கைகளும் மிகவும் பிடித்திருந்தது. ஜமாஅத்திற்கு எதிராக எந்த விஷயத்தை அவர்கள் கேட்டாலும் சுயமே அவர்களே அதைப்பற்றி ஆராய்ந்து வந்தார்கள். அவர்கள் பைஅத் செய்வதற்கு முன்னதாக ஒரு முறை பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி எதிரிகள் எங்களை சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்து விட்டனர். மர்ஹூம் அந்த சமயத்தில் அஹ்மதி அல்லாதவராக இருந்தும் கூட இவ்விஷயத்தில் மிகவும் வீரத்துடன் எங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு எங்களை தற்காத்து வந்தார்.

அவர்களது மற்ற உறவினர்களும் கூட பைஅத் செய்த பிறகு அவர்களது வாழ்க்கை முற்றிலுமாக மாறி விட்டது என்றே எழுதியுள்ளனர். மார்க்க விஷயங்களைப் பற்றி பேசும் போது எப்போதும் திருக்குர்ஆன் வசனங்களையும், நபிமொழிகளையும் மேற்கோளாக காட்டியே அவர்கள் பேசி வந்தார்கள். இந்த அளவு மார்க்க அறிவை இவ்வளவு விரைவாக இவர்கள் எங்கிருந்து கற்றுக் கொண்டார்கள்? என்று நாங்கள் வியப்படைந்தோம். இதைப் பற்றி அவர்களிடம் கேட்ட போது, இந்த எல்லா அறிவுகளையும் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டேன். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்தே ஒளியை பெற்றிருந்தார்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

இவர் தனக்குப் பின்னால் மனைவியையும், ஒரு மகனையும், ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார். இவரது குடும்பத்தைச் சார்ந்த பெரும்பாலான நபர்கள் அஹ்மதிகளாக இருக்கின்றனர். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக. அவர் மீது கருணை காட்டியவாறு தனது நேசத்திற்குரியவரின் பாதங்களுக்கு கீழ் அவருக்கு இடமளிப்பானாக. இவரது மனைவி மக்களின் பாதுகாவலனாகவும் அவர்களுக்கு உதவி செய்பவனாகவும் அல்லாஹ் இருப்பானாக. அவர்களது தேவைகளை நிறைவேற்றுபவனாக அல்லாஹ் இருப்பானாக. இவர்களது சந்ததிகளை நல்லவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக. தமது தந்தையின் அடிச்சுவடுகளை பின்பற்றிச் செல்கின்ற நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

## திருக்குர்ஆனிலிருந்து...

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக் -கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

### திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)**

**ஜோதி அஸ்டின்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**

பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**

**ஆதம்பாக்கம்**

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**

சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**

சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

### திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர்-களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)**

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 7 December 2017 Issue No. 49

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

அவர்களது வியாபார விஷயங்களில் பொலிவை உருவாக்கி விட்டான். எத்தகைய காரணிகளை மறைவிலிருந்து அவன் உருவாக்கி விட்டான் என்றால் செல்வச் செழிப்பினால் கிடைக்கும் வெற்றிகள் அவருக்கு ஆரம்பமாகி விட்டன. பிறகு, சில நாட்கள் கழிந்த பிறகு சரியாக இருந்த பணிகள் உடைந்து போயின.

**99 -வது அடையாளம்:** ஒருமுறை அதிகாலை நேரத்தில் இன்று ஹாஜி அர்பாப் முஹம்மது லஸ்கர் கான் அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவரிடம் இருந்து பணம் வருகின்றது என்ற இல்ஹாம் வந்தது. நான் காதியானில் வசித்து வருகின்ற இரண்டு ஆரியர்களான ஷரம்பத் மற்றும் மலாவாமல் ஆகியோரிடம் காலை நேரத்திலேயே அதாவது, தபால் வருகின்ற நேரத்திற்கு மிகவும் முன்னரே இந்த முன்னறிவிப்பைக் கூறினேன். ஆனால், இந்த இரண்டு ஆரியர்களும் மத ரீதியாக இருந்து வந்த எதிர்ப்பின் காரணமாக எங்களில் ஒருவர் தபால் அலுவலகத்திற்குச் சென்று பார்த்த பிறகுதான் இதை ஏற்றுக் கொள்வோம் என்று கூறி அதில் அவர்கள் பிடிவாதமாக இருந்தனர். மேலும், தற்செயலாக தபால் அலுவலகத்தின் துணை போஸ்ட் மாஸ்டரும் கூட இந்துவாகவே இருந்தார். அவர்களது கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டேன். தபால் வரக்கூடிய நேரம் வந்ததும் அவர்கள் இருவரில் ஒருவரான மலாவாமல் என்ற ஆரியர் கடிதத்தைக் கொண்டு வருவதற்காகச் சென்றார். ஒரு கடிதத்தை அவர் கொண்டு வந்தார். அதில் சர்தார் கான் அவர்கள் இவ்வளவு பணம் அனுப்பியுள்ளார் என்று எழுதப்பட்டிருந்தது. இப்போது சர்தார் கான் யார்? அவர் முஹம்மது லஸ்கர் கான் அவர்களின் நெருங்கிய உறவினரா? இல்லையா? என்ற புதிய பிரச்சனை எழுந்தது. எனவே, இதுபற்றி தீர்மானித்து அதன் மூலம் உண்மையை தெரிந்து கொள்வதற்கான உரிமை ஆரியர்களுக்கு இருக்கின்றது. அப்போது என்னை எதிர்க்காமல் இருந்து வந்த ஹோத்தி மர்தானில் இருந்து வந்த அஸாயே மூஸா என்ற நூலின் ஆசிரியரான, கணக்கராகப் பணிபுரிந்து வந்த முன்ஷி இலாஹி பக்ஷ் சாஹிப் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது. அதில் இங்கு, இந்த விவாதம் எழுந்துள்ளது. சர்தார் கானுக்கு முஹம்மது லஸ்கர் கானுடன் உறவு இருக்கின்றதா? இல்லையா? என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டது. சில நாட்கள் கழிந்த பிறகு முன்ஷி இலாஹி பக்ஷ் அவர்களிடமிருந்து ஹோத்தி மர்தானிலிருந்து பதில் வந்தது. அதிர் சர்தார் கான் அவர்கள் அர்பாப் லஸ்கர் கான் அவர்களின் மகனாவார்கள் என்று எழுதப்பட்டிருந்தது. அப்போது அந்த இரண்டு ஆரியர்களும் எதுவும் பதில் கூற முடியாமல் இருந்து விட்டனர். இப்போது இது எத்தகைய ஒரு மறைவான செய்தியாக இருக்கின்றது. இறைவனை தவிர வேறு எவருக்கும் இவ்வாறு கூறும் ஆற்றல் இருக்க முடியும் என்பதை அறிவு ஏற்றுக் கொள்ளாது. இந்த முன்னறிவிப்பில் இரு தரப்பிலுமே எதிரிகளின் சாட்சியே இருக்கின்றது. அதாவது, ஒரு தரப்பில் ஆரியர்கள் இருக்கின்றனர். அவர்கள் தொடர்பாக இந்த முன்னறிவிப்பு அவர்களிடம் கூறப்பட்டது. மேலும், அவர்களில் ஒருவர் கடிதத்தைக் கொண்டு வருவதற்காக தபால் அலுவலகத்திற்குச் சென்றார் என்று அவர்களைப் பற்றிய எனது வாக்குமூலம் இருக்கின்றது. இரண்டாவது தரப்பில், இப்போது லாஹூரில் இருந்து வருகின்ற கணக்கரான முன்ஷி இலாஹி பக்ஷ் சாஹிப் அவர்களின் சாட்சியம் இருக்கின்றது. அவர் எனக்கு எதிராக 'அஸாயே மூஸா' என்ற தனது நூலை எழுதி வெளியிட்டிருந்தார். அதில் அவர், என்னைப் பற்றி, தான் விரும்பியதை எழுதியிருந்தார் என்றாலும் நான் இந்த அளவு கூறிக் கொள்கின்றேன். இந்த முன்னறிவிப்பை உண்மைபடுத்துவது தொடர்பாக இந்த இரு தரப்பு சாட்சிகளிடமும் இது பற்றி இறைவனிடம் ஆணையிட்டு நடந்ததைக் கூறுமாறு கேட்க வேண்டும். சாதாரணமான வாக்குமூலத்தை அவர்களிடமிருந்து பெறக் கூடாது. ஏனென்றால், மலாவாமாலும், ஷரம்பத்தும் எந்த அளவு காழ்ப்புணர்வுள்ள ஆரியர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் எனக்கு எதிராக பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர். மேலும், முன்ஷி இலாஹி பக்ஷ் சாஹிப் அவர்கள் எனக்கு எதிராக 'அஸாயே மூஸா' என்ற நூலை எழுதி, பலரையும் ஏமாற்றிய அதே நபராவார். எனவே, இவர்கள் இறைவன் மீது சத்தியம் செய்து கூறுவதைத் தவிர வேறு வழியில்லை. மேலும், இந்த முன்னறிவிப்பு ஏனைய பலருக்கும் கூட தெரியும். முன்ஷி சாஹிப் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதும் அதற்கு நான் மேலே குறிப்பிட்டிருந்த அந்த பதில் வந்தது என்பதும் கூட அவர்களுக்கு தெரியும். எனவே, அந்த இரு ஆரியர்களும் இந்த முன்னறிவிப்பை மறுத்து விடுவார்கள் என்பதோ அல்லது முன்ஷி இலாஹி பக்ஷ் சாஹிப் அவர்கள், தான் கடிதம் அனுப்பியதை மறுத்து விடுவார்கள் என்பதோ எவ்வகையிலும் சாத்தியமற்ற ஒன்றாகும். அவர்கள் மறுத்தாலும் கூட சர்தார் கானுக்கு அர்பாப் லஸ்கர் கானுடன் எவ்வகையிலாவது உறவு இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்ற விஷயத்தை இப்போதுகூட நாம் தீர்மானித்து விடலாம். (ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 260)

## மகத்தான முன்னறிவிப்பு

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இமாம் மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**அனைத்து மக்களே! கேட்டுக் கொள்ளுங்கள். இது வானத்தையும் பூமியையும் படைத்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் இந்த ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரப்புவான். மேலும், சான்று மற்றும் ஆதாரத்தின் அடிப்படையில் அனைவரின் மீதும் இவர்களுக்கு வெற்றியை வழங்குவான். அந்த நாட்கள் வரவிருக்கின்றன.**

**இன்னும் கூறுவதென்றால், அவை அண்மையில் இருக்கின்றன. உலகில் இந்த ஒரு மார்க்கம் மட்டுமே கண்ணியத்துடன் நினைவு கூறப்படும்.**

**இறைவன் இந்த மார்க்கத்திலும் ஜமாஅத்திலும் மிகவும் மேலான வழக்கத்திற்கு அப்பாற்பட்ட அருளை வழங்குவான். இதை இல்லாமல் ஆக்குவது பற்றி சிந்திக்கும் ஒவ்வொருவரையும் தோல்வியுறச் செய்வான். மேலும் இந்த வெற்றி மறுமை நாள் வரை நிரந்தரமாக இருக்கும்.....**

**இன்றிலிருந்து மூன்று நூற்றாண்டுகள் முழுமை அடைந்திருக்காது. ஈஸாவை எதிர்பார்த்திருக்கின்ற முஸ்லிம்களாயினும், கிறித்தவர்களாயினும் மிகவும் அவநம்பிக்கையடைந்து இந்த பொய்யான கொள்கையை விட்டு விடுவார்கள்.**

**மேலும், உலகில் ஒரே மார்க்கம்தான் இருக்கும். ஒரே தலைவர்தான் இருப்பார். நான் ஒரு விதையை விதைக்க வந்துள்ளேன். எனவே, அந்த விதை என் கைகளால் விதைக்கப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும். அதைத் தடுப்பவர் எவருமில்லை.**

[தஸ்கிரதுஷ் ஷஹாததைன் பக்கம் 64,65
ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 66,67

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad